# திருவாட்டாறு - ஆழ்வார்கள் அநுபவம்

## ( மலையாள நாட்டு திவ்ய தேசம்)



ஆசிரியர்:

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்



நன்றி:

1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி - தமிழ் மற்றும் ஸம்ஸ்க்ருத தட்டச்சு உதவி

2. www.anudinam.org, www.prtraveller.blogspot.com - படங்கள் உதவி

3. ஸ்ரீமதி சாரதா ஸ்ரீநிவாஸன் - மின்புத்தகத் தொகுப்பு





# பொருளடக்கம்


ஆசிரியர் முன்னுரை 1

திருவாட்டாறு திவ்ய தேசம் 3 - 13






ஆதி கேசவ பெருமாள் (Courtesy: www.prtraveller.blogspot.com)



ஸ்ரீ:

# திருவாட்டாறு - ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

******

ஜய ஸம்வத்ஸரம் - சித்திரை மாதம் - பௌர்ணமி திதி - April 15th, 2014

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த பொழுது 1992 மார்ச் தொடங்கி 1993 செப்டம்பர் வரை பல வெளிநாடுகளுக்கு பயணித்திருந்த வேளைகளில் பகவத் சிந்தனை விடாமலிருக்க, 108 திவ்ய தேசங்களைப் பற்றி வேத, வேதங்கங்கள், ஆழ்வார் அருளிச்செயல்கள், ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் கொண்டாடப் பட்டிருக்கும் விதங்களை பற்றி எழுந்த கருத்துக் கோவைகளை ஒரு நூல் வடிவமாக எழதியது இன்றும் பசுமையாக மனதில் நினைவிருக்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, மலையாள நாட்டு திவ்ய தேசமான திருவாட்டாறைப் பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்







ஆதி கேசவ பெருமாள் (Courtesy: www.anudinam.org)



ஸ்ரீ:

# திருவாட்டாறு - ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)


ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )


******

மலைநாட்டுத் திருப்பதிகள்: திருவாட்டாறு

திருவனந்தபுரத்திற்கு தெற்கே நாகர்கோயில் செல்லும் வழியில், 24 மைல் தூரத்தில், இத் திருப்பதி உள்ளது. இங்கு ஆதிகேசவப் பெருமாள், அஷ்டாங்க விமான நிழலில், மேற்கு பார்த்த வண்ணமாக சயனித்துள்ளார். தாயாரின் பெயர் மரகதவல்லி நாச்சியார். திருவனந்தபுர கர்ப்பக்ரஹம் போல், இந்த ஸன்னதியும் மூன்று வாசல்கள் கொண்டுள்ளது. வலது கை வாசலில் திருமுடியையும், திருமுகத்தையும் ஸேவித்துக் கொள்கிறோம். இடது கை வாசலில் திருவடி ஸேவை கிடைக்கிறது. நடு வாசலில், திரு உதரமும், தாமரைக் கொடியில் அமர்ந்த ப்ரஹ்மாவின் ஸேவையும் கிடைக்கிறது. அஷ்டாங்க விமானம், திருவனந்தபுரத்து விமான பாணியில் விளங்குகிறது. நம்மாழ்வார் திருவாய்மொழியின் கடைசி பத்தின், ஆறாவது திருமொழியில், திருவாட்டாறு எம் பெருமானை மங்களாஸாசனம் செய்துள்ளார்.

திருவாட்டாறு பாசுரப் பத்திற்கு முந்திய பத்தில், நம்மாழ்வார், ஜனங்களுக்கு ஸ்ரீமந் நாராயணனின் பேரருள் பெறும் மார்க்கத்தை ஆசார்யன் என்ற ஸ்தானத்தில் உபதேசித்தார். இந்த பரோபதேசம், பின் வரும் பாசுரத்துடன் ஆரம்பமாகியது:

கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர்,

எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே.

நாராயண சப்தத்தை தன்னுள் அடக்கிச் சொல்ல முடியாத உயர்வு கொண்ட அஷ்டாக்ஷர மந்த்ரத்தை உய்யும் வழியாக அறிவித்து, நாரத கல்பம் சொல்லும் மார்க்கத்தை கடைபிடிக்குமாறு பரோபதேசம் செய்தார். நாரதர், ஸனகர் போன்ற பல மஹாத்மாக்கள், திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தை ஜபித்து, எம்பெருமானின் ஸ்தானமான பரமபதத்தை





அடைந்தார்கள் எனப் பின் வருமாறு கூறியதை ஆதாரமாகக் கொண்டு, ஆழ்வார் பரோபதேசம் செய்தார்:

பஹவோ ஹி மஹாத்மானோ முநய: ஸநகாதய: |

அஷ்டாக்ஷரம் ஸமாச்ரித்ய தே ஜக்முர் வைஷ்ணவம் பதம் ||

கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையவர்களே! நமோ நாராயணாய, நமோ நாராயணாய என்று ஜபியுங்கள். தினந்தோறும் வாடாத, வதங்காத புத்தம் புது மலரெடுத்து, பகவத் ஸந்நிதானம் அடைந்து, நாம ஸங்கீர்த்தனம் பண்ணினால். உங்களுக்கு தவறாமல் வைகுந்த ப்ராப்தி கிடைக்கும் எனப் பின் வருமாறு பரோபதேசம் செய்தார்:

நாடீர் நாடோறும், வாடா மலர் கொண்டு,

பாடீரவன் நாமம், வீடே பெறலாமே.

அவன் பேரை ஒதுங்கள், "நாரணனெம்மான், பாரணங்காளனை" நினைமின்! உங்கள் வினைகள் ஒழியும். "ஏதம் சாராவே" என்றெல்லாம் பரோபதேசம் மூலம், நமக்கு ஹிதோபதேசம் செய்தார். பகவான் பூமியில் தனக்கு கொடுத்த கார்யம் முடிந்தது என நம்மாழ்வார் அறிந்து கொண்டார். புவியில் அவதரித்த காரியம் முடிந்தது என திருவாட்டாற்றான் மூலமாக அறிந்து அவனுக்கு "அருள் பெறுவாரடியார்" என ஆரம்பமாகும் பத்து பாசுரங்கள் மூலம் தன் அத்யந்த நமஸ்காரங்களையும், நன்றியையும் தெரிவித்தார்.

முதல் பாசுரத்தில், திருவாட்டாற்றான் தனது பரமபத யாத்ரைக்கான வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது புரிந்து கொண்டு, நம்மாழ்வார் தன் மனதுடன் சந்தோஷத்துடன் பேச ஆரம்பித்தார். ஹே, மட நெஞ்சே! இதுவரை நாம் பிரார்த்தித்து வந்த உயரிய வரத்தை பகவான் கொடுத்து விட்டான். பாக்ய வசத்தால், எம் பெருமான் விஷயத்தில் பெருங்காதல் கொண்ட நமக்கு அவன் இரங்கி விட்டான். கைலாகு கொடுத்து தனது பெருஞ்சோதியுடன் கலக்க அழைத்து விட்டான். இதுவரையில் அர்ச்சாவதாரங்களை ஸேவிப்பதிலும், விபவாவதாரங்களை த்யானிப்பதிலும் காலம் கழித்து, அவனுடைய தொண்டர்களுக்கு ஸேவை புரிவதிலும் காலத்தை இப்புவியில் கடத்திய நமக்கு பரிபூர்ண அனுக்ரஹம் கிட்டி விட்டது. மயர்வு மிகுந்த இந்த பெரிய ப்ராக்ருத லோகத்தில் ஜன்மம் எடுக்க வேண்டியது என்ற துக்கமான விஷயம் ஒழிந்து விட்டது. இனியும் அர்ச்சாவதாரங்களை ஸேவிக்க வேண்டும் என்ற மடப்பமுடைய (சபலமுடைய) நாம், அந்த ஆசைகளை துறந்து, பரமபத நாதனின் வீட்டிற்கே செல்லும் காலம் அவன் அருளால் நிலைத்து விட்டது. ஆகவே, மனதே!



உனது அஞ்ஞானத்தை அகற்றிக் கொண்டு, ஒரு சிறிய காலம் திருவாட்டாற்றானின் திருவடிகளையே தொழுது கொண்டு இரு. மனமாகிய நீ ஆத்மாவான என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி அர்ச்சிராதி மார்க்கத்தையே இனி பகவத் பாதத்யான முகமாக நினைத்திரு என ஆழ்வார் கேட்டுக் கொண்டார்.



கீதோபதேசம் (Courtesy: http://vedicpriest.org )







மனமே, கீதையில் அர்ஜுனனுக்கு பகவான் "தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோக யுக்தா பவார்ஜுந" என்று உபதேசித்தது உனக்கு தெரியுமே! அர்ச்சிஸ் என்ற அக்னியால் வழி காட்டப்பட்டு, அந்த வழித் துணையுடன், க்ரமமாக மற்ற பதினொன்று ஆதிவாஹர்களாலே (வழி நடத்துபவர்களாலே) உதவப்பட்டு, ப்ரஹ்ம்ம பதம் அடையும் விஷயத்தில் உனது அபிலாஷைகளை திருப்பு என ஆழ்வார் இங்கு தனது மனதிடம் கேட்டுக் கொண்டார். இனி ஜனன மரணத்தை உண்டு பண்ணக்கூடிய பயங்கரமான ஸம்ஸார பந்தம் நமக்கு கிடையாது. அர்ச்சிஸை (அக்னியை) முதல் ஆதிவாஹகராய் உடைய ஒரே மார்க்கம் எல்லா உபநிஷத்துக்களிலும் வளர்க்கப் பட்டிருக்கிறது உனக்கு தெரியும்! இந்த வழியில் சென்று, நாம் பரம் ஜ்யோதிஸ்ஸை அடைந்து, திரோதனம் (மருள்) நீங்கி, ஞானஸ்வரூபம் பெற்று, "அபஹதபாப்மத்வாதி ஸத்யஸங்கல்பத்வ பர்யந்த" குணகனனாய் ஆவிர்பவிக்கப் போகிறோம்.

அபஹதபாப்மத்வம் என்பதால், புண்ய, பாப கார்யங்களை செய்தாலும், இனி ஸத்யஸங்கல்பனின் (நினைத்ததை நினைத்தபடி செய்பவன்) பேரருள் மூலம், முக்தனாகி மாறிய நமக்கு புண்ய, பாபங்களின் பலன் ஏற்படாது. நாம் பூம வித்யா ப்ரகரணம் அறிவிக்கும் "ஆத்மாதி: ஆத்மக்ரீட: ஆத்மமிதுந: ஆத்மாநந்த:" என்ற முக்தனின் நிலை அவனருளால் அடையப் பெற்றோம். இனி சாந்தோக்யபநிஷத் சொல்லும்

அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதி: உபஸம்பத்ய

ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே

என்ற வகையில், முக்தனாகி, இதுவரை இருந்து வந்த சரீரத்திலிருந்து வெளிக்கிளம்பி, பரஞ்ஜ்யோதியை அடைவோம். "மட நெஞ்சே, மருள் ஒழி, வாட்டாற்றான் அடி வணங்கே" என்ற பின் வரும் முதல் பாசுரம் மூலம் கேட்டுக் கொண்டார்:

அருள் பெறுவாரடியார் தம்மடியனேற்கு, ஆழியான்

அருள் தருவான் அமைகின்றானது **நமது விதிவகையே**,

இருள் தரு மாஞாலத்துள் இனிப் பிறவியான் வேண்டேன்,

மருளொழி நீ மட நெஞ்சே! வாட்டாற்றானடி வணங்கே.

இரண்டாவது பாசுரத்தில் தன் வேண்டுகோளுக்கு இசைந்த மனதிடம், தன்





ஸந்தோஷத்தை. “கேட்டாயே மட நெஞ்சே” என்று தெரிவித்தார். திருவாட்டாற்றில் உள்ள ஆதிகேசவனை எம் பெருமான் என புரிந்து கொண்டு, ஸர்வஸ்வாமியான அவனுடைய கல்யாண குணங்களைப் பாடி, பாசுரமிட்டு, கொடுவினைகளை அழித்து, பிறப்பு, அறுப்பு என்ற சமாசாரங்கள் விலகி, ஸம்ஸார வ்யாபாரத்தை தொலைத்து, பரமபதம் ஏகி, பரவாஸுதேவனைக் காண நிற்கின்றேன் என ஆழ்வார் தன் நிலையைப் பின் வருமாறு விளக்கினார்:

வாட்டாற்றானடி வணங்கி மாஞாலப் பிறப்பறுப்பான்,

கேட்டாயே மட நெஞ்சே! கேசவனெம்பெருமானை,

பாட்டாய பலபாடிப் பழவினைகள் பற்றறுத்து,

நாட்டாரோடியல் வொழிந்து நாரணனை நண்ணினமே.

பல பிரபந்தங்கள் செய்து, பரோபதேசமும், ஸ்வ உபதேசமும் பண்ணி முடித்து, அவன் அருள் பெற்று, வைகுந்தம் செல்ல முன் வந்து உள்ளோம். அவனும் பரபரப்புடன் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறான். “மண் உலகில் வளம் மிக்க வாட்டாற்றான் வந்து இன்று விண்ணுலகம் தருவானாய்”, விதிவகையே விரைகின்றான். இப்பூமி மண்டலத்தில் எல்லையில்லா கீர்த்தியும், சக்தியும் உடைய திருவாட்டாற்றான், என் முன் தோன்றி இப்போதே தனது பரமபதத்தை எனக்கு அளிக்கும் நோக்குடன், த்வரையுடன் (பரபரப்புடன்) நெருங்குகிறான். இன்னும் சில திருவாய்மொழிகள் வேண்டும் என்பதால், நான், மிகுந்த பாசுரங்களை முடிக்க சிறிய காலம் கொடுப்பதற்காக, உடனே விண்ணகர் சேர்க்க வேண்டாம், இருந்த போதிலும் நான் வருகிறேன் என்பதை தெரிவிக்கத்தான், தனது தாள் சதங்கை ஒலியை நான் கேட்க வைக்கிறான். இந்த பரம பாக்யம் அவன் அனுக்ரஹித்தது. நம்மால் செய்யக் கூடியதில்லை எனப் பின் வரும் மூன்றாம் பாசுரம் மூலம் நம்மாழ்வார் தெரிவித்தார்:

நண்ணினம் நாராயணனை நாமங்கள் பலசொல்லி,

மண்ணுலகில் வளம் மிக்க **வாட்டாற்றான் வந்தின்று,**

**விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்** விதிவகையே,

எண்ணின் வாறா காவிக் கருமங்களென்னெஞ்சே!





நான்காவது பாசுரத்தில், தான் நாமங்கள் பல சொல்லியதற்கும், தமிழ் பிரபந்தங்களை செய்ததற்கும் சக்தி அளித்து நடத்திக் கொடுத்த ஆதிகாரணன் திருவாட்டாற்றில் சயனித்திருக்கும் ஆதிகேசவன் தான் எனப் பின் வருமாறு கூறி, அவனை நமஸ்கரித்துக் கொண்டார்:

**என்னெஞ்சத்துள்ளிருந்திங்கிருந்தமிழ் நூலிவை மொழிந்து,**

வன்னெஞ்சத்திரணியனை மார்விடந்த **வாட்டாற்றான்,**

மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்காய் படைதொட்டான்,

நன்னெஞ்சே! நம்பெருமான் **நமக்கருள்தான் செய்வானே.**

கடின ஹ்ருதயமுடைய துஷ்டனான ஹிரண்யனை வதம் செய்தவனும், பாரதப் போரில் பாண்டவர்களுக்கு ஸஹாயம் புரிய, யுத்த களத்தில், சங்கெடுத்து ஊதினவனும், பீஷ்மர் முதலியோர் வியக்கும்படி சக்ராயுதம் எடுத்துப் பின் அதை உபயோகிக்காது நின்றவனுமான ஆதிகேசவனை நீ வணங்கு எனத் தன் மனதிடம் ஆழ்வார் சொன்னார். என் மூலம் தமிழ் பிரபந்தங்களைத் தானே சொல்லிய நம்பெருமான் நிச்சயமாக தானே அருள் புரிவான். விண்ணிலும், மண்ணிலும் உள்ள நித்யஸூரிகள், ஜீவன் முக்தர்கள் ஆகியோர் நெஞ்சுகளை விட்டு, என் நெஞ்சில் அவன் புகுந்தான். சுலபமாக அறிய முடியாத வடமொழி வேதார்த்தங்களை, எளிதே அறியுமாறு தமிழ் மொழியில் பிரபந்தங்களை என் மூலம் செய்து வைத்தான். திருவாய்மொழியை என் வாய் மூலமாக வெளிப்படுத்தின என்னப்பன், இனித் தன் சோதி நாடாகிய வைகுந்தமும் வந்தடைய அழைப்பு அளித்துவிட்டான். நாமும் இஷ்ட பூர்த்தி அடைந்தோம் என தன் மனதிடம் ஆழ்வார் கூறினார்.

அடுத்த பாசுரங்களில் பரமபதம் செல்லத் தயாராகி நிற்கும் தமக்கு ஏற்பட்ட அத்புத அனுபவங்களை நம்மாழ்வார் விவரித்தார். இந்த அனுபவங்களை விவரிக்கும் ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது திருவாட்டாற்று பாசுரங்கள் பின் வருமாறு:

**வானேற வழி தந்த வாட்டாற்றான்** பணிவகையே,

நானேறப் பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே,

தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன், செழும் பாவை

தானேறித் திரிவான் **தன் தாளிணையென் தலைமேலே.** --- (5)





தலைமேல தாளிணைகள் தாமரைக்கண் என்னம்மான்,

நிலை பேரானென்நெஞ்சத் தெப்பொழுதும் எம்பெருமான்,

**மலை மாடத் தரவணை மேல் வாட்டாற்றான்**, மதமிக்க

கொலையானை மருப்பொசித்தான் **குரைகழல்கள் குறுகினமே**. --- (6)

குரைகழல்கள் குறுகினம் நங்கோவிந்தன் குடிகொண்டான்,

திரைகுழுவு கடல்புடைசூழ் தென்னாட்டுத் திலதமன்ன,

வரைகுழுவும் மணிமாட **வாட்டாற்றான் மலரடிமேல்**,

விரைகுழுவும் **நறுந்துளவம் மெய்ந்நின்று கமழுமே**. --- (7)

ஐந்தாவது பாசுரத்தில், என் மனமே,

நாஹமுத்ஸ்ருஜ்ய கோவிந்தம் அந்யமாராதயாமி போ:

என்று விஷ்ணு தர்மம் சொல்லும் வகையில், கோவிந்தனையன்றி வேறு ஒருவனையும் ஆராதிக்கமாட்டேன் என்ற வ்ரதம் கொண்டு, பரமபதம் ஏறுவதற்கு பாக்யமடைந்தேன். ஆதிகேசவன் காட்டிய வழியில் சென்று வினைப் பற்றொழிந்து, நரகமாய் உள்ள ஸம்ஸார மண்டலத்தைப் பார்த்து சிரிக்கக் கூடிய தைரியம் பெற்றேன். அவனும் தன்னை அலங்கரிக்கும் திருத்துழாய் மாலையுடன் கருடன் மேல் ஏறி, என்னருகில் வந்து, தன் பொற்றாமரைத் திருவடிகளை எனது சிரஸ்ஸிற்கு அலங்காரமாக இருக்கும் அருள் புரிந்தான். கருடனின் திருக்கைகளில் சேரும் திருவடிகளை எனது தலையில் சூடினான். ஸம்ஸார லோகத்தைப் பார்த்து, நானும் வழி தந்த வாட்டாற்றான் அருளால் வானேறுகிறேன் பார் என்று சொல்லி சிரித்துக் கொண்ட வண்ணமாய் உள்ளேன் என ஆழ்வார் தம் நிலையை விளக்கினார்.

ஆறாவது பாசுரத்தில், திருவடியைச் சென்னியில் வைத்தது மாத்திரம் அல்லாது, தனது கர்மேந்த்ரியங்கள், ஞானேந்த்ரியங்கள் எல்லாவற்றிலும் வானேறும் அருள் தந்த வாட்டாற்றான் கலந்து நிற்பதை ஆழ்வார் தெரிவித்தார். அவன் செந்தாமரைக் கண்களால் நிலைபேரா வண்ணமாக, நித்ய வாஸம் செய்து தைரியமளிக்கிறான். தான் குவலயாபீடம்





என்ற மத யானையை அழிப்பதற்காக அதை துரத்தியபோது தன் கால் சதங்கைகளின் ஒலியை என் காதுகளில் சேர்த்து வைக்கிறான். இது மாதிரி, ஒவ்வோர் அவயத்திலும் அன்பினால் என்னுடன் கூடியுள்ளான் ஆதிகேசவன் என்று ஆழ்வார் பக்தி மிகுதியுடன் கூறினார்.

ஏழாவது பாசுரத்தில், சதங்கை ஒலிக்கும் திருவடிகளின் நாதம் காதில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது, அவன் என்னை நோக்கி விரைகிறான் என்பது ஸ்பஷ்டமாகியது. நம் கோவிந்தன் மனதில் குடி கொண்டிருப்பதும் தெளிவாகியது, ஸர்வகந்தன் என்ற புகழ் பெற்ற அந்த தென் திசைக்கே திலகமாய் விளங்கும் ஆதிகேசவனின் திருத்துழாய் மணம், என் உடலில் நிலைத்து வாசனை வீசுகிறது, நானும் ஸர்வ விதங்களிலும் ஸம்ச்லேஷ (கூடியிருந்து ஆனந்திக்கும்) பாக்யம் பெற்றேன் என நம்மாழ்வார் தன் நிலையை விளக்கினார்.

எட்டாவது பாசுரத்தில், "சீலமில்லா சிறியோன்" ஆகிய தனக்கு, இத்தகைய அனுக்ரஹ விசேஷங்களை அருளிய "திருவாட்டாற்றாற்கு எந்நன்றி செய்தேனா, என்னெஞ்சில் திகழ்வதுவே" என்று சொல்லி நம்மாழ்வார் ஆச்சர்யப்பட்டார். இப்பாசுர வாக்யங்கள் பின் வருமாறு:

மெய்ந்நின்று கமழ்துவள விரையேறு திருமுடியன்,

கைந்நின்ற சக்கரத்தன் கருதுமிடம் பொருது புனல்,

மைந்நின்ற வரைபோலும் திருவுருவ வாட்டாற்றாற்கு,

என்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே.

திருமேனியெல்லாம் துளஸி மாலையின் பரிமள கந்தம் திகழ, பக்த ரக்ஷணத்திற்காக பல இடங்கள் விரைந்து, சக்ர ஆயுதத்தை உபயோகிக்கும் கடல் நீர் வண்ணனான திருவாட்டாறு ஆதிகேசவனார்க்கு என்ன உபகாரம் செய்து, இந்த பெரு நிலை அடையும் பாக்யம் பெற்றேன் என்பது தெரியவில்லை. ஏது உபகாரத்தையும் எதிர் பார்க்காது, அவ்யாஜ கருணாமூர்த்தியான ஆதிகேசவன் என் நெஞ்சை இருப்பிடமாக ஏற்றுக் கொண்டான். என்ன பாக்யம்! என்ன பாக்யம் என்று தன் மனதிடம் நம்மாழ்வார் சொல்லி வியந்தார்.

ஒன்பதாவது பாசுரத்தில், தான் வந்து என் உள்ளக் கடலில் சயனித்துக் கொண்டது மாத்திரம் அல்லாது, தனது தேவியான அரவிந்தப் பாவையும் அங்கு தன்னுடன் சேருமாறு ஆதிகேசவன் அருளினான் என்றார். திருமால், திருமார்பில் உள்ள திருமங்கையுடன் என் மனக் கோயிலில் குடி கொண்டான். பாற்கடல் போல் ரம்யமான இடம் ஏதும் இல்லையே





என்ற இகழ்வுடன் நோக்காது, நமது பக்தனின் மனதாயிற்றே என்று புகழ்வுடன் நினைந்து, அவன் அங்கு கோயில் கொண்டுள்ளான் எனப் பின் வருமாறு தெரிவித்தார்:

திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்,

திகழ்கின்ற திருமாலார் சேர்விடம் தண் வாட்டாறு,

புகழ்கின்ற புள்ளூர்தி போரரக்கர் குலம் கெடுத்தான்,

இகழ்வின்றி என்னெஞ்சத்தெப்பொழுதும் பிரியானே.

பத்தாவது பாசுரத்தில், “வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்” என்று அறியப்படும் மஹத்தான புருஷனாகிய தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு அருள் புரியும் ஆதிகேசவன் தன்னையும் ஒரு பொருளாக மதித்து, மஹதாச்ரயண பலன் அளித்ததைக் கொண்டாடினார். நீங்களும் அப்பேற்ப்பட்ட மஹா புருஷனை ஆச்ரயித்து, பேரருள் பெறுங்கள் எனக் குறிப்பிட்டார். இப்பாசுரம் பின் வருமாறு:

பிரியாதாட் செய்யென்று பிறப்பறுத்தாளறக் கொண்டான்,

அரியாகி இரணியனை ஆகங்கீண்டானன்று,

பெரியார்க்காட் பட்டக்கால் பெறாத பயன் பெறுமாறு,

வரிவாள் வாயரவணை மேல் வாட்டாற்றான் காட்டினனே.

ஆதிசேஷன் மேல் திருவாட்டாற்றில் சயனித்திருக்கும் ஆதிகேசவன், என்னை விட்டுப் பிரியாமல் எனக்கு ஸேவைகள் புரிந்து வா என்று அருளினான். சாந்தோக்ய உபநிஷத் மூலம்

ஸ கல்வேவம் வர்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே

ந ச புநராவர்ததே ந ச புநராவர்ததே

ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக, தன் பதமடைந்தவன், மறுபடியும் இந்த பூலோகத்திற்கு திரும்பி வர மாட்டான் என சொன்னதை எனக்கு ஞாபகப் படுத்தினான். கீதையில் நேரிடையே பின் வருமாறு சொன்னதை நடத்திக் காட்டினான்.





மாமுபேத்ய புநர்ஜந்ம து:காலயம் அசாச்வதம் |

நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமாம் கதா: | --- கீதை 8:15

ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்திநோர்ஜுந |

மாமுபேத்ய து கௌந்தேய! புநர்ஜந்ம ந வித்யதே || --- கீதை 8:16

என்னிடம் சரணாகதி செய்து என்னை அடைந்தவன் துக்காலயமான ஸம்ஸார மண்டலத்திற்கு மறுபடியும் திரும்ப மாட்டான். அவனுக்கு இனி பிறப்பு-இறப்பு என்ற தளைகள் கிடையாது. அந்தமில் பரமபதம் சேர்ந்து என் ஸேவையிலேயே ஈடுபட்டு, என்றும் என்னுடன் இருப்பான் என்று தான் சொன்ன வண்ணம் செய்து, நிறைவேற்றி விட்டான்! அவன் எனக்கருளிய பரமபதத்தை கண்டு, நித்யஸூரிகளும், நல்ல காரியம், நல்ல காரியம் என்று சொல்லிக் கொண்டு, அளவு கடந்த ஆனந்தமடைந்து நிற்கிறார்கள் எனப் பின் வரும் பல ச்ருதி பாசுர மூலம் தெரிவித்து, திருவாட்டாற்று பாசுரங்களை ஆழ்வார் முடித்தார்:

காட்டித்தன் கனைகழல்கள் கடுநரகம் புகலொழித்த,

வாட்டாற்றெம் பெருமானை வளங்குருகூர்ச் சடகோபன்,

பாட்டாய தமிழ்மாலை யாயிரத்துளிப்பத்தும்

கேட்டு, ஆரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே.

இனிமையாக த்வனிக்கும் திருவடிகளை எனக்குக் காண்பித்து, கொடிய ஸம்ஸார துக்கங்களிலிருந்த தன்னை விடுவித்த திருவாட்டாற்று எம் பெருமானைப் பற்றி தான் இயற்றிய பத்து பாசுரங்கள் காதுக்கு இனிமையானவை. அவைகளைக் கேட்டு, விண்ணோரும் மகிழ்வர் என நம்மாழ்வார் குறிப்பிட்டார். நஞ்சீயர் விண்ணோர்கள், இத் திருவாய்மொழியைக் கேட்டு, பகவத் கைங்கர்யத்தில் குறையாது, மேன்மேலும் வளரும் ஆசை கொண்ட "வித்ருஷ்ணர் ஆவர்" என்று உரை செய்தார். இப்பேற்பட்ட மஹத் ஐச்வர்யம் கொடுக்கக் கூடிய திருக்குருகூர் சடகோபனின் அருள் வாக்குகளை ஓதி, நாமும் திருவாட்டாற்று திவ்ய தம்பதிகளின் பேரருள் பெறுவோமாக!





श्रीवर्तुल नदीपुर सागर निमग्नाय क्षेत्रे राम पुष्करणी तटे अष्टाङ्ग अष्टाक्षर विमानश्चायायां श्रीमते मरगतवल्ली नायिका समेत श्री आदिकेशव परब्रह्मणे नमः

ஸ்ரீவர்துல நதீபுர ஸாகர நிமக்நாய க்ஷேத்ரே ராம புஷ்கரணீ தடே அஷ்டாங்க அஷ்டாக்ஷர விமானச்சாயாயாம் ஸ்ரீமதே மரகதவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ ஆதிகேசவ பரப்ரஹ்மணே நம:

SrIvartula nadIpura, sAgara nimagnAya kshetre, rAma pushkaraNI taTe, ashTAnga ashTAkshara vimAnaScAyAyAm, SrImate maragatavallI nAyikA sameta SrI AadikeSava parabrahmaNe namaH

*****

## Additional Reading Materials:

1. en.wikipedia.org/wiki/Adikesava_Perumal_Temple,_Kanyakumari

2. Sthala puranam from anudinam.org

